**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII, Cr.P.C)

**SPLCC.No.18/2025 - PW-43**

| | |
|---|---|
| Name | திரு.ரஞ்சித்குமார் |
| Father Name | மனோகரமணி |
| Village /Area | திருவேற்காடு |
| Taluk | பூந்தமல்லி |
| Occupation | Retired |
| Age | 70 |
| Religion | Hindu |
| Aadhar Card No. | 6061 3746 3224 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 19.02.2026.

**எதிரிகள் 3 முதல் 10 வரை ஆஜர். 11 முதல் 15 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் வேலூரில் வேளாண்மை பொறியியல் துறையில், மேற்பார்வை பொறியாளராக பணிபுரிந்து, 30.04.2013 தேதி ஓய்வு பெற்று, தற்போது திருவள்ளுர் மாவட்டம், திருவேற்காட்டில் வசிக்கிறேன். 2008-2009ம் ஆண்டுகளில் வேலூரில் வேளாண்மை பொறியியல் துறையில், மேற்பார்வை பொறியாளராக பணிபுரிந்த போது பழைய பம்ப்செட் மாற்றும் திட்டம் செயலாக்கப்பட்டது. என்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் உள்ளடங்கிய பகுதிகள் என்னுடைய அதிகார வரம்பில் இருந்தது. வேலூர் மாவட்டத்தில் செயற்பொறியாளர் திரு.மணி அவர்கள் வேலூர் அவர்கள் மாவட்ட அளவில் பொறுப்பாளராகவும், அவரின் கீழ்

வாலாஜா, வேலூர், திருப்பத்தூர் ஆகிய உபகோட்டங்கள் உதவி செயற்பொறியாளரால் செயலாக்கப்பட்டு வந்தது. வாலாஜா உபகோட்டத்தில் திரு.இராமலிங்கம் அவர்கள் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்த காலத்தில் பம்ப் செட்டுக்கள் விவசாயிகளுக்கு சரியாக சப்ளை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அந்த குற்றச்சாட்டுக்களுக்கு 31 விவசாயிகளுக்கு பம்ப் செட்டுக்கள் சரியாக கொடுக்கப்படவில்லை என்று உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்கள் பொறுப்பு என்று நிர்ணயித்து இவர்களுக்கும், இவர்களின் மேல் அதிகாரியான உதவி செயற்பொறியாளர் திரு.இராமலிங்கம் அவர்களுக்கும் பணம் பிடித்தம் செய்ய ஆணை வழங்கப்பட்டு, பணம் பிடித்தம் செய்யப்பட்டது. 2012ம் ஆண்டில் அவ்வாறு பணம் பிடித்தம் செய்ய செயற்பொறியாளர், வேலூர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது சம்மந்தமாக மேற்பார்வை பொறியாளரான எனக்கு எவ்வித தகவல்களும் செயற்பொறியாளரால் கொடுக்கப்படவில்லை. இது சம்மந்தமாக என்னை வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

மேற்பார்வை செய்வது தான் என் பணி என்றால், சரிதான். எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு திட்டங்களை செயல்படுத்திவிட்டு, என்னிடம் அறிக்கையை கொடுப்பார்கள் என்றால், சரிதான். இதற்கு இடையில் நான் கள ஆய்வு செய்யும் போது நான் பார்வையிடுவேன். இந்த பிரச்சனை சம்மந்தமாக எனக்கு 2012ம் ஆண்டில்தான் தெரியவந்தது என்றால், சரிதான். போலீசார் விசாரித்த

போது எனக்கு இது சம்மந்தமாக தெரிய வந்தது என்றால், சரிதான். செயற்பொறியாளரும் இது சம்மந்தமாக என்னிடம் வந்து சொன்னார். எனக்கு இந்த பிரச்சனை சம்மந்தமாக நேரிடையாக தெரியாது என்றால், சரிதான். செயற்பொறியாளர் மணி அவர்கள் விவசாயிகள் குறை தீர்ப்பு நாளில் பிரச்சனை எழுந்தது என்று சொல்லி Charge Memo கொடுத்ததாக கேள்விபட்டேன் என்றால், சரிதான். விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் Minites புத்தகத்தை நான் பார்வையிடவில்லை. போலீஸ் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த போது, "தாங்கள் (ஆய்வாளர்) காட்டிய கடந்த 17.07.2009ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்ட Minites விவசாயிகள் யாரும் மின்மோட்டார்கள் சப்ளை செய்ததில் குறைகள் உள்ளது என எந்த விவசாயிகளும் சொல்லியதாக எந்த பதிவுகளும் இல்லை" என்று வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் விசாரித்த போது சொன்னேன் என்றால், நான் அவ்வாறு சொல்லவில்லை. இந்த விவரங்களை ஆய்வாளர்தான் என்னிடம் சொன்னார். குறைகள் நடந்ததாக செயற்பொறியாளர் மணி சொல்லும் நாளில் அந்த மாதிரி எந்தவித குறைகளும் விவசாயிகள் சொல்லவில்லை என்று போலீசார் விசாரித்து என்னிடம் சொன்னார்கள் என்றால், சரிதான். செயற்பொறியாளர் மணி அவர்கள் மேற்கண்ட விவசாயிகள் குறை தீர் நாளில் குறை சொன்னதாக மாவட்ட ஆட்சியர் மூலம் தெரியவந்தது என்று சொல்லிதான் Charge Memo மற்றும் பணம் பிடித்தம் ஆணை வழங்கியதாக கேள்விபட்டேன் என்றால், மணி என்னிடம் 31 பம்ப் செட்டுக்கள் குறைவாக வழங்கப்பட்டதாக இளநிலை

மற்றும் உதவி பொறியாளர் தெரிவித்ததன் பேரில் Charge Memo மற்றும் பணம் பிடித்தம் ஆணை வழங்கியதாக சொன்னார். மாவட்ட ஆட்சியர் குறை தீர் நாளில் நடந்த விவரங்களை என்னிடம் மணி சொல்லவில்லை. காவல் ஆய்வாளர் தான் என்னிடம் மணி சொன்னதாக சொல்லி சொன்னார். "மணி என்னிடம் 31 பம்ப் செட்டுக்கள் குறைவாக வழங்கப்பட்டதாக இளநிலை மற்றும் உதவி பொறியாளர் தெரிவித்ததன் பேரில் Charge Memo மற்றும் பணம் பிடித்தம் ஆணை வழங்கியதாக சொன்னார்" என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். எந்த Charge Memo மற்றும் பணம் பிடித்தம் ஆணை எதனையும் நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். "உதவி செயற்பொறியாளர் திரு.இராமலிங்கம் அவர்களுக்கும் பணம் பிடித்தம் செய்ய ஆணை வழங்கப்பட்டு, பணம் பிடித்தம் செய்யப்பட்டது" என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். அந்த மாதிரி பணம் எதுவும் பிடித்தம் செய்யப்படவில்லை என்றால், எனக்கு தெரியாது. Charge Memo எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும், பிடித்தம் ஆணையும் போடப்படவில்லை என்றால், இரண்டையும் நான் பார்க்கவில்லை. போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல. நான் சொன்னது போல் எந்த தவறும் நடக்கவில்லை என்றால், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –**

**இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM Digitally signed by M SELVAM Date: 2026.02.19 12:30:21 +0530

Principal District and Sessions Judge,
Ranipet